**சார்பு நீதிமன்றம், நெய்வேலி**

**OS.No. 126/2023**

பெயர் : திரு. சௌந்தரப்பாண்டியன் (வா.சா.1)

தந்தை பெயர் : திரு. ஜெகநாதன் தொழில் : விவசாயம்

கிராமம் : சின்னதானன்குப்பம்

தாலுக்கா : குறிஞ்சிப்பாடி வயது : 46

தேதி : 24.03.2026

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24–ம் நாளாகிய இன்று சாட்சியாக வா.சா.1 இன் வாக்குமூலம் (1873–ம் ஆண்டின் 10 ஏற்பாட்டின் படி) திருமதி.S.உமா மகேஸ்வரி, பி.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதியாகிய என்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை:–

நான் இந்தவழக்கின் வாதி மற்றும் வ.சா.1 ஆவேன். எனது முதன்மை சாட்சியத்திற்கு பதிலாக முதல் விசாரணை சத்திய பிரமாணவாக்குமூலத்தை தாக்கல் செய்திருக்கிறேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து அந்த சங்கதிகளை நான் புரிந்துகொண்டு சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்திருக்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.எனது தரப்பு சான்றாவணங்களாக பிராமண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 3 வரை உள்ள ஆவணங்களை குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன். மேற்படி ஆவணங்களானது வாதி தரப்பில் வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகின்றன. பிராது படி தீர்ப்பு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

(ஒப்பம்/–திருமதி. S. உமா மகேஸ்வரி, பி.ஏ., எல்.எல்.எம்.,)
சார்பு நீதிபதி,
நெய்வேலி